உ

வேலுமயிலுந்துணை.

நூதன கிராம்போன்

சங்கீதகீர்த்தனாம்ருதம்

(இரண்டாம்பாகம்)

10-இன்ச் D/S தமிழ் ரிகார்டுகள்

கிரீன் லேபில்.

சங்கீத வித்வான்

S. V. சுப்பையபாகவதர் பாடியது.

பிளேட் நே. 2865 காமசுந்தராங்கி 1-2-பாகம்.

இராகம்-தன்யாசி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

காமசுந்தராங்கி உனது
காதலோங்கியே
மனமுருகுது அறிகுவாயடி கா

அநுபல்லவி.

கட்டுப்பட்டேன் கணைமலர்
பட்டுக் கெட்டுத் தடுமாறினேன் கா
கடுந்துயர மிகுந்தேனடி
இளங்குயில்கள்தரும் கொடுந்துயரமது கா
கட்டுப்பட விருதனமதை
யிட்டுக்கிடு நெறிதரவிது கா
கவிக்குளுயர் பாவினமே
படுத்துதடி சுகப்படவே
நிலைத்திடுவோம் மலரணையில் கா
தேரிகின்மீது மேற்சிறந்து
திகழ்ந்திட வதரங்குளிர
புகழ்தருகுவாய் சுகம் பெருகிட கா

ஷை பாட்டு 2-வது பாகம்.

வண்டு மொய்த்திட்ட மலர் கூந்தலாளே
மாமதியை நக ரும் முகத்தாளே
ஒண்டு மதகஜ முறு மதத்தாளே
உடல்பொரு ளுயிர் சகலமும்
உனதிடமது வருள் பெருகிட கா

பிளேட் நே, 2768 அப்பனே நீயேகதியே 1.-2 பாகம்

பல்லவி.

அப்பனே நீயே கதியே எனை
நீகோர் நிதியே அ

அநுபல்லவி.

தூயநின் தரிசனம் தொடர்ந்தெனை யழைக்க
தூற்றிய செற்பயிர் துரிதத்தில் தழைக்க
மாலயன் நால்வரும் மலர்ப்பதம் யான்தொழ
மகிழ்ந்தேன் உன்னிடம்
என்மனத்தே சொற்பனத்தே வரும்நீயே கதியே அ

சரணம்.

ஷை பிளேட்டின் 2-வது பாகம்.

நாளைக்கு நாளைக்கென்றே தினம்கழியுது
ஞானசபையை எண்ணில் ஆனந்தம் பொழியுது
நாளைக்கு நாளைக்சென்றே தினம்கழியுது
ஞானசபையை எண்ணில் ஆனந்தம் பொழியுது
நாளைக்கு நாளைக்கென்றே தினம்கழியுது
ஞானசபையை யெண்ணில் ஆனந்தம் பொழியுது
வேளைக்குதவிசெய்ய வெறுச்சிலம் பழியுது
பிரட்டா நிதிக்காத்தா பராபரத்தின் பரமே அ

தெலுங்கு ரிகார்டு.

பிளேட் நே, 1722 மோக்ஷமுகலதா 1-2 பாகம்

இராகம்-ஸாரமதி-தாளம்-ஆதி.

பல்லவி.

மோக்ஷமு கலதா புவிலோ ஜீவன்
முக்துலு காநி வாரலகு மோ

அநுபல்லவி.

சாக்ஷாத் காரநீ ஸத் பக்தி
ஸங்கீத ஞான விஹீ னுலகு மோ

சரணம்.

பிராணு நிலஸம் யோகமு வல்ல
பிரணவ நாத ஸப்தஸ் வரமுலுபரக
வீணு வாதன லொலுடௌ சிவமனோ
வித மொரு கரு த்யாக ராஜவிநுத மோ

ஸ்வரம்.

ரிகா ஸஸ ரிகமா பதநி நிததம மக ஸா
ரிகா ஸஸ ரிகமபா தாநிஸ ஸநிநித
தம மகபா ஸரீரிரி ஸாரி கா
மகஸா நிதமா பதநிஸா ஸா ஸா ஸா
ரிகா ஸஸ ரிகமா பத நீ
நிததம மகஸா ரி கா ஸ ஸ ரி க மா ப
பதநீ நிததம மகஸா பத நிஸா ஸா ஸா மோ

ஆர்மோனியம்
உறையூர் T. M. காதர்பாஷா
பாடியது.

பிளேட் நெ, 1781. { ஷண்முகா ஏழையின்மேல்
சரவண பவகுகனேவா }

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஷண்முகா ஏழையின்மேல் தயவில்லையா
தாமதமேனோ சரிதானோ பதில் நீ சொல்லையா ஷண்

அநுபல்லவி.

தக்கன் தவமழித்து முக்கண்சிவ குமரனே தயவில்லையா
சரவணபவகுக குருபர திருமால் மருகனே தயவில்லையா
சத்திக்கரவேல் பிடித்த சூரரை
வெட்டித்தரைமேல் மடித்திடும்
ஜெயமுருகனே தயவில்லையா

சரணம்.

பெண்மாயமோகத்திலே பித்தப்பட்டு சித்தங்கெட்டு
பெருத்த உற்சாகத்திலே
பேதகத்தையே வகிக்க பாதகத்தையே பொருத்திட்ட
பெரும்புகழ் மூத்தமிழ் நிருபன்
வித்துவ பாஸ்கரன்

பண்புகாதேகத்திலே பக்திக்கிதஞ்செய்ய முத்தப்பா
கலியுகவரதனே அத்திக்குறமகள் கந்தப்பா
அனவரதஞ்சொல் கத்திப்பதமருள் சொந்தப்பா
முறையிடுமெனதிடம் தயவில்லையா ஷண்

இராகம்-தோடி-தாளம்-ஏகம்.

பல்லவி.

சரவணபவ குகனேவா தருணமீதென்னை பொருந்தவா ச

அநுபல்லவி.

சாதுக்கள் லோலனே தீரசிங்காரனே
காரணவேலனே கந்தனே ச

முடுக்கு.

மாதுவள்ளியை விடாது
வனமீதிருந்தவனே கந்தப்பா
தமிழ்மொழி சுப்பிரமணி தொழுதேன்
வாவடி குணவா அறுமுகனே
வரமருள இதுததியே ச

பிளேட் நெ, 2437 கல்லோ சொல்லாய் மனது 1-2 பாகம்

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

கல்லோ சொல்லாய் மனது கார்த்திகேயனே முருகா க

அநுபல்லவி.

வில்லாளியார் விஜயன்
தீராதி தீரனே என்சொல் லுதாரனே
தண் ஜோதி திருமால் மருகா க

தொகையரு.

கருணுகரா பழணிக்கடவுளே
எனதுமுறை உன் காதுகண்
செவிடானதோ

ஷை பாட்டு எடுப்பு.

முருகா வென வுன்
சித்தமுள்ள மேயென தெய்வ
உண்மைப்பயன் மெய்யானதோ க

பிளாக் லேபில் ரிகார்ட்.

ஆலந்தூர் ஒரிஜனல் இந்து டிரமாடிக் கம்பெனி

அயன் ஸ்திரீபார்ட்

மனமோகன R. M. ரங்கசாமிநாயுடு

பாடியது.

பிளேட் நே, 2367 { சேம்மலே / ஓடாதே நீ நில்லு / ஏன் முரண்டு செய்குறீர்

லலிதாங்கி.

தொண்டிச்சிந்து.

செம்மலே அறைகுவேன்கேள் நான்
சித்திர க்ஷேத்ரபுர புத்ரியெனக்கு
மணமது தமக்கு! செய்யமுன்பு
வரித்திருந்ததால் நிருபம் எழுதி
அனுப்பினேனின் சமுகம் தாம்
அங்கிகரியாமலே பங்கம்செய்தால்
நானே நேரில்வந்து உம்மை
நாடினே னிசையாமல் தேடிவிலங்கை
இட்டு ஆரண்யம் விட்டீர் அங்கு
ஏதோஒரு பூதத்தாலே வாதிட்டுதப்பி
வரும்போது ஓரரசன் என்மேல்
மனமாகி மருவிட எனைகேட்க

இசையவில்லை யதனால் கிழவிபோல்
எனையாக்க சோர்வர முனம் ஏமாற்றி
களிப்புடன் வரும்போது இந்த
காங்கேயனரக்கண்டு ஏங்கயுரைத்தேன்
இவரால் நாட்டியம் புரிந்து உம்மன
திசைந்திடச் செய்துமே விசனம்தீர்த்தேன்
நான்தான் லலிதாங்கி நீர்
எனிப்படி தலை தான் குனிந்தீர்
சந்தோஷ மாய் வாரும் துரையே
சந்தோஷமாய் வாரும்

லலிதாங்கியில் தர்க்கப்பாடல்.

ஓடாதே நீ நில்லு
உனக்கேனிந்த தில்லு மல்லு
வாடாதே பதில் சொல்லு
வழிமறியாதே நீ செல்லு
செல்லுவேனே உன்னைவிட்டு
உன் சினேகனல்ல உடன் பட்டு
புல்லு வாயே வாசை கெட்டு
புகலாதே வீண் திட்டு
திட்டெல்லாம் சந்தோஷம்
திரும்புமே உனக்கது நாசம்
கை பட்டாலே கை வாசம்
நீ காண்பாய் எமனது தேசம் நீ ஓ

லலிதாங்கியில் தர்க்கப்பாடல்.

பல்லவி.

லலி என் முரண்டு செய்கிறீர்
என்னைக்கூட வெறுக்கிறீர்
அழ சீ! நானோ உன்னைக் கருதிடேன்
நடடி பெண்ணே நடடி
லலி உனக் காண்மைத் தனமில்லையா
அழ சட்! அதைக்கேட்காமல் செல்குவாய்
லலி இஷ்ட மில்லை
அழ இல்லை இஷ்டம்
லலி எனில்லை
அழ அது ஏனோ என்

பிளேட் நே, 2301 { தைபிரைகண்டால் / என்னுடன்பிறந்ததங்கை

நல்லதங்காளில் அலங்காரி பாடல்.

கண்ணிகள்.

தைப்பிறை கண்டால் தரையிலிறக்குவேன்
மாசிப் பிறைகண்டால் மண்மே லிறக்குவேன்
மூப்பிறை கண்டால்நான் மூடிவைப்பேனடி
நாற்பிறை கண்டால் நானே வார்ப்பேன் தை

அல-வ-ம்:—இவ்வளவு சீக்கிரத்தில் கொடுப்பேனு ஹேறு! ஹேறு! சக்களத்தி! நாரி! உன்வித்தை தெரியுமடி எனக்கு! வித்தாரக்கள்ளி விறகொடிக்க போனாளாம் கற்றாழை முள்ளு கொத்தோடே காலில் பொத்துக்கொண்டதாம்! அடிபோடி தெரியும் உன்னை! இப்போது கொஞ்சம் கூட கூழிடவே மாட்டேன்! இப்போது நீ என்ன செய்வாய் ஹும் உன் மிரட்டுக்கு அஞ்சுவேனோ! பனங்காட்டு நரி சல சலப்புக்கு அஞ்சாதடி; ஜாக்கிரதை, அப்படியே கிட, இப்போது முடியாது போடி.

நல்லண்ணனுக்கும் அலங்காரிக்கும் தர்க்கபாடல்.

என்னுடன் பிறந்த தங்கை
இங்கு வந்தனளா அவள்
தங்கி கொந்தனளா தன்
ஏழுபிள்ளைக ளோடு இங்கு
வாழ வந்தனளா தங்கை
வாழ வந்தனளா. என்

அலங்காரி.

வந்து உண்டு சயனிக்கிறார்
வஞ்சியென் போலே அந்த
சப்ர மஞ்சத்தின் மேலே
அலுத்த சஞ்சலத் தாலே
மாதிற்கு குறை யேதுமேயில்லை
நாதனே யறிவீர் என்
நாதனே யறிவீர் வந்து

நல்லண்ணன்.

அண்ணன் தங்கை எங்களைப்போல்
யாரு மில்லையடி
சிறந் தோரு மில்லையடி
ஒருபேரு மில்லையடி
இங்கு அந்தமுடன் வந்தமாதை
சுந்தரி காட்டுவாய் என்
சுந்தரி காட்டுவாய் அ

அலங்காரி.

வாட்டங்கொண் டிருக்கலாமோ
மன்மத சாமி
என்—அன்புள காமி
வாரும்—தென்புடன் நேமி
வகைவகை யன்னம் சுகமாயுண்டிட
மகராஜரே வாரும் இப்படி
மகராஜரே வாரும் வா

கிரீன் லேபில் ரிகார்ட்.

மதுரை பபூன் ஷண்முகம்

பாடியது.

பிளேட் நெ, 2815 { அமராவதி உந்தனுக்கு
னக்குவாய்த்த பெண்டாட்டி.

அமர்ாவதி உந்தனுக்கு
அழகான கல்யாணமாம்
கல்யாணமாம் கல்யாணமாம் நல்ல
கல்யாணமாம் கல்யாணமாம்
சொகுசான கல்யாணமாம் அ

ஆனைமேலே ஊர்கோலமாம் நல்ல ஊர்கோலமாம்
சொகுசான கல்யாணமாம்
ஷோக்கான ஊர்கோலமாம் அ

பந்தலெல்லாம் போட்டாச்சு
பாக்குபணம் வைத்தாச்சு
தங்கமெல்லாம் வாங்கியாச்சு
தாலிசெய்ய கொடுத்தாச்சு
தாலிசெய்ய கொடுத்தாக்சு
பீலிசெய்து முடித்தாச்சு அ

அஞ்சுநாளாய் கல்யாணமாம்
ஆனைமேலே ஊர்கோலமாம்
ஆனைமேலே ஊர்கோலமாம்
ஆயிரரூபாய் வாழைமரம்
பொன்னுசாமி நாகசுரம்
புல் பியாண்டு சின்னமேளம்
புதுச்சேரி நாகரத்னம்
புஷ்பவனம் பூச்சய்யங்கார்
புகழ்பெற்ற அழகநம்பி
புகழ்பெற்ற அழகநம்பி
புண்ணிய தக்ஷிணாமூர்த்தி அ

கல்யாணி காம்போதி
கானட ராகமூர்த்தி
தர்பார் பூபாளமுடன்
தனியாய் உசேனிராகம் அ

மிட்டாயி பூந்திலட்டு
மிருதுவான ஜிலேபி தட்டு
மிருதுவான ஜிலேபிதட்டு
முருக்குவடை அல்வா ஒப்பிட்டு அ

திண்டுக்கல் வெத்திலையாம்
திருபுவனம் சுருள்பாக்கும்
இத்தனை வைபவமும்
இரண்டுகாளில் நடக்கும் அ

சர்க்கஸ் கம்பெனியும்
சரியான டிராமாக்களும்
பாலிவாலா பார்விதியேட்டர்
பலமான இந்த்ரசபா அ

காமிக் பாட்டு.

எனக்குவாய்த்த
பெண்டாட்டி நல்லவளையா
கெண்டைமீனை கொஞ்சம் சுண்டலவைச்சிருந்தா
கெளுத்திமீனை கொஞ்சம் கொழும்புவைச்சிருந்தா
அண்டைவீட்டுக்காரனுடன் பேசிக்கொண்டிருந்தா
லண்டி லவண்டி எமகண்டி ஜெகஜண்டி
எனைவிட்டு பிரிந்தா எ

சரசர வென்று சாணத்தை கரைத்தா
சங்கதி சொல்லுவேன் வாவென்று அழைத்தா
குடமுடன் தலைமேலே போட்டுமே யுடைத்தா
தேயந்துபோன துடப்ப கட்டையா லடித்தா
ஆசை பெண்டாட்டி என்
அருமைக் கண்ணாட்டி
அறியாமல் தெரியாமல்
படுமோசம் போனேன் படுமோசம் போனேன் எ

பிளேட் நெ, 2840 { பந்தலிட்டு தாலிகட்டி
சக்கரைப் பெண்ணே

பந்தலிட்டு தாலிகட்டி பத்துவருஷ மாச்சு
பாலனொன்றும் பிரக்கவில்லையே
என் கண்ணாட்டி என் பெண்டாட்டி
பாலனொன்றும் பிறக்கவில்லையே ப

இரவும் பகலும் பட்ட
கஷ்டம் வீணாகப் போச்சுதே
என் கண்ணாட்டி என் பெண்டாட்டி
பாலனொன்றும் பிரக்கவில்லையே ப

காமிக் பாட்டு.

சக்கரைப் பெண்ணே செக்கச்சிவந்த
சிங்காரி ஒய்யாரி கெம்பீரி அலங்காரி ச
நானுன் பக்கம் வந்தேனே
மிக்கவும் தானே
பாரீர் ஜதை பாரீர்
தேரீர் யாரும் வாரீர் ச
கொக்கு மரக் குயில்
லக்கணம் சொல்லும்

பாரு நல்ல ஜோரு
பல் பேரு
நீ தக்க புருஷனை பக்கமணைந்திட
பாரும் உனக்கா தாரம்
மாமதன் சுக சாதனக்காரியே
நீயே மனம்வையே எனதையே
மாலையிட்ட மாமன்வேலை
கெட்டுப்போவ துண்டோ
வேறுண்டோ கற்கண்டோ

பெங்களூர். தாயி பாடியது.

பிளேட் நெ, 2807 { அருட்ஜோதி தெய்வம்
எல்லாம் செய்யவல்ல

இராகம்-தோடி-ராகமாலிகை-தாளம்-சாபு

அருட்ஜோதி தெய்வ மென்னை
யாண்டு கொண்ட தெய்வம்
அம்பலத்தே யாடுகின்ற
வானந்தத் தெய்வம்

இராகம்-காம்போதி-தாளம்-சாபு.

பொருட்சேரும் மறைகளெல்லாம்
போற்றுகின்ற தெய்வம்
போதாந்தத் தெய்வ முயர்
நாதாந்தத் தெய்வம்

இராகம்-பைரவி-தாளம்-சாபு

இருட்பாடு நீக்கி யொளி
யீந்தருளுந் தெய்வம்
எண்ணிய நா னெண்ணி யவா
றெனக் கருளும் தெய்வம்

இராகம்-சஹானா-தாளம்-சாபு.

தெருட்பாட லுவந்தெனையுஞ்
சிவமாக்குந் தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற
தெய்வமே தெய்வம்

இராகம்-கல்யாணி-தாளம்-திருபுடை.

எல்லாம்செய் வல்ல தெய்வம்
மெங்கு நிறை தெய்வம்
என்னுயிற் கலந் தெனக்கே
யின்ப நல்குந் தெய்வம்

இராகம்-சஹானா-தாளம்-திருபுடை

நல்லார்க்கு நல்ல தெய்வம்
நடுவான தெய்வம்
நற்சபையி லாடுகின்ற
நடராஜத் தெய்வம்

இராகம்-நாதநாமக்ரியா-திருபுடை.

கல்லார்க்குங் கற்றவர்க்கும்
களிப்பருளுந் தெய்வம்
காரணமாந். தெய்வ மதிட்
பூரணமாந் தெய்வம்

இராகம்-எதுகுல-காம்போதி-திருபுடை

சொல்லாத நிலைக ளெலாஞ்
சொல்லுகின்ற தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற
தெய்வமதே தெய்வம்

வைலெட் லேபில் ரிகார்ட்

திருச்செந்தூர். ஷண்முக வடிவு

பாடியது.

பிளேட் நெ, 1803 { பரமேது வினைசெய்யும்
மனமான ஒருசிறுவன்

திருவருட்பா.

இராகம்-நாதநமக்கிரியை.

பரமேது வினைசெய்யும் பயனேது பதியேது
பசுவேது பாசமேது
பத்தியே தடைகின்ற முத்தியே துருவேது
பாவ புண்யங்களேது

வரமேது தவமேது விரதமே தொன்றுமிலை
மனம் விரும்புணவுண்டு நல்
வித்திரமணிந்து மடமாதர் தமை நாடிநறு
மலர் சூடி விளையாடி மேற்
கரமேவ விட்டு முலைதொட்டு வாழ்ந்தவளோடு
கலந்து மகிழ்கின்ற சுகமே
கண்கண்ட சுகமிதே கைகண்ட பலனெனும்
கயவரைக் கூடாதருள்
தாமேவு சென்னையிற் கந்தகோட்டத்துள்வளர்
தலமோங்கும் கந்தவேளே
தன்முகத் துய்யமணி யுன்முகச் சைவமணி
ஷண்முகத் தெய்வமணியே.

இராகம்-பேகடா தாளம்-ஆதி

பல்லவி.

மனமான ஒரு சிறுவன்
மலரடியைப் பிடித்தும்
மதியாம லிருக்கலாமோ முருகா ம

அநுபல்லவி.

உனையே தினம் கொண்டாடி
உள்ள முருகப் பாடி
கனிகர மில்லாத தேனே
கந்தா உனக்கு நீதி தானே ம

சரணம்.

நம்பியிருந்த என்னையே
நட்டாற்றில் விடவும் போமா
அம்பா பார்வதி தனையா
அடியேனைக் கைவிட லாமா
உம்பர் மனோ கரனே
உனக்கு நான் என்ன வேமா
எம்பிரானே முரு கையா
என்மேலின்னமும் வீமா ம

பிளாக் லேபில் ரிகார்ட்.

P. மாணிக்கம்பிள்ளை பாடியது.

பிளேட் நெ, 1513 { மஹாமாயக்காரி
உள்ளூரு வெங்கணம்மா

சதாரம்

திருடனுக்கும் சதாரத்திற்கும் தர்க்கம்.

திரு மஹா மாயக்காரி மறைவாக வாடி
அதோ ஒரு சோலையடி அங்கே செல்லுவோம் ம

சதா போடா வெறியா பொல்லாத மூடா
போக்கிரி பயலோடா நீ போதும் போதும் போ

திரு வாது செய்யாதே வாடி யிப்போதே
வந்தனம் செய்தேனடி வா வா ம

சதா தீண்டாதே யென்னைத் தெய்வம் சீறுமுன்னே
திருட்டுப்பயலோடா நீ சே! சே! தெரியுமடா நில் போ

தெம்மாங்கு சதாரம்

உள்ளூருவங்கணம்மா உல்லாசகாரியிவள்
வேற்றுமுகம் பார்த்தாயானால்
விலங்கடித்துப் போட்டிடுவேன்
தன்னானே தனுக்குதங்கம்
சொன்னேனே குலுக்குதங்கம்
டாங்கு டிங்கு காரியிவள். பெங்களூரு பெண்மயிலே
அன்னமே பொன்னம்மா என்னமோ உன்னாலே
கண்கள் ரெண்டும் சோருதடி உ

ஊர்க்குருவி வேடங்கொண்டு
உயரப் பறந்தாயானால்
செம்பருந்து வேடங்கொண்டு
செந்தூக்காய்த் தூக்கிடுவேன் உ

செம்பருந்து வேடங்கொண்டு
செந்தூக்காய்த் தூக்கிவிட்டால்
பூமியைக் கீரியல்லோ
புல்லாய் முளைத்திடுவேன் உ

பூமியைக் கீறி நீயும்
புல்லாய் முளைத்தாயானால்
காராம்பசு வேடங்கொண்டு
கடித்திடுவேனப்புல்லை உ

தன்னானே தனக்கு தங்கம்
சொன்னேனே குலுக்கு தங்கம்
டங்கு டிங்கு காரியிவள் பெங்களூரு பெண்மயிலே
அன்னமே பொன்னம்மா
என்னமோ உன்னாலே
கண்ணுரெண்டும் சோருதடி
மல்லிகைப்பூ தோட்டத்திலே
மலராய் முளைத்தாயானால்
பூவெடுத்து வாங்கியல்லோ
புனிதமாய் கொய்திடுவேன் உ

தனிப்பாட்டு

சூழ்ந்த சர்க்கார் சுற்றுவோம் துணிந்த கதர் நூலே
வாழ்ந்திடும் சுதேசமே மகாத்மா காந்திக்கு ஜே ஜே ஜே சூ

பாரதத்தாய் அம்பிகை பஜனை பாடுவோமே
பாரதப் பண மாத பத்ம மகாத்மா காந்திக்கு ஜே ஜே ஜே சூ

காங்கிரஸ்ஸில் கம்பீர கதர் பிரம்மானந்தம்
மாம்பழந்தேன் வேல்சாமி சொல் மகாத்மா காந்திக்கு ஜே ஜே ஜே

தனிப்பாடல்கள்.

ச. சு. சங்கரலிங்க கவிராயர்

பாடியது.

மாதவி மானே செந்தேனே என்ற மெட்டு

சரணங்கள்.

கார்த்திகா சித்ய கல்யாண
கந்தனே மெய்ஞ்ஞான
கீர்த்திதா வேத புராண
தேவனே சுப்ர மண்யா கா

தென் பரங் கிரி முருகா
தேசிகா மால் மருகா
பொன்ம யூரனே விசாகா
போற்றினேன்சிவ ஷண்முகா கா

தந்தருன் சுக சாரீரம்
சங்கீ தானு சாரம்
வந்தருன் செய்வா யிந்நேரம்
மைந்த னுக் காதாரம் கா

சங்கர லிங்கேச ராதி
சாமியே ஜெக ஜோதி
இங்கெனக் கருள் கியாதி
ஈச னே முருகேச கா

கலிலோ என்றமெட்டு.

பல்லவி.

மயிலாசல முருகனை யனுதின
மகிழுடன் நினைமனமே—வினை விடுமே மயி

அநுபல்லவி.

கயிலாசலன் கனிவுட னருளிய
கதிர்வடி வேற்கரனை—குருபரனை
குயிலார் மொழி வனிதையர் மயலதை
குணமென தினம்நாடி—பொருளைத்தேடி
ஒயிலாயவற்கிடுவதில் பலனென்ன
உறவின ரொருகோடி—இருந்து மென்ன
அயலார் எமன் எதிர்வரும் பொழுதுன்னை
ஆதரித்திடுவாரோ—ஆசையினாலே மயி

பெஜவாடா கபிலவாய்
ராமநாத சாஸ்திரி பாடியது.

பிளேட் நே, 3208 ஸ்ரீகோபாலகிருஷ்ண சேவா

இராகம்-திலகமேந்து.

ஸ்ரீகோபால கிருஷ்ண சேவா தின தினவண
ஆகமாஸுதா பிருந்தாவனவீ ஆரிஸௌரீ ஸ்ரீ
முரலிகானவிலோலா வஸுசேல
முரதமன மாரமண ஸுசரண ஸ்ரீ

இரண்டாம்பாகம் முற்றிற்று.